கழக சட்டத்துறையின் சார்பில் கடலூர் கிழக்கு, பாண்டிச்சேரி உள்ளிட்ட மாவட்டங்களின் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், DLC, CLC,DLIC,ULC,TLC,FLC, மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் பயிற்சி வகுப்பு கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் கழக சட்ட துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. நிர்வாகிகளுக்கு பயிற்சி வகுப்பு நடத்தினார்கள். இந்த பயிற்சி வகுப்பில் கடலூர் புகழேந்தி, ஐயப்பன், கே.எஸ். இரவிச்சந்திரன், சூரியா வெற்றிகொண்டான், சு.ராதாகிருஷ்ணன்,ஜெ. பச்சையப்பன், மு.தினேஷ்குமார், சுவை சுரேஷ், அங்கயற்கண்ணி துரை கி.சரவணன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடக்கத்தில் ஆர். அருள் ஜோதி வரவேற்பு உரை ஆற்றினார்கள் எஸ். பரிமளம் நன்றி கூறினார்கள்.

வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த அவசர செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, முனைவர் பிரபாத் குமார், குடியாத்தம் தொகுதி பார்வையாளர் டேம்.வெங்கடேசன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெல்லை அரசுப் பொருட்காட்சியினை துவக்கி வைத்து

1194 பயனாளிகளுக்கு ரூ.2.74 கோடியில் நலத்திட்ட உதவிகள்

சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

நெல்லை, ஆக.2- நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை சிறைச்சாலை எதிர்புறம் உள்ள சி.எஸ்.ஐ. திருமண்டலத்திற்கு சொந்தமான மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியின் துவக்க விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று அரங்குகளை மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜூ, மாவட்ட ஊராட்சித்தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ்,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் விஜிலா சத்தியானந்த் ஆகியோர் முன்னிலையில் 30.07.2025 அன்று துவக்கி வைத்து, 1194 பயனாளிகளுக்கு ரூ.2.74 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத் துறை, குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, வேளாண்மைத் துறை, காவல்துறை, கால் நடை பராமரிப்புத் துறை,மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை,கூட்டுறவுத்துறை, வருவாய்த் துறை, சமூக நலத்துறை, தோட்டக்கலைத்துறை, பொதுப்பணித்துறை,இந்து சமய அறநிலையத் துறை,பள்ளிக் கல்வித்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,கைத்தறி மற்றும் கதர் கிராமத் தொழில்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மீன்வளத்துறை மற்றும் மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,கோ ஆப்டெக்ஸ், ஆவின், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என 32 அரங்குகளை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்த தாவது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி,அரசு பொருட்காட்சிகளில் தமிழ் நாடு அரசின் சிறப்புமிகு எண்ணற்ற திட்டங்கள் மற்றும் நலத்திட்டங் களையும் பொதுமக்கள் பார்த்து தெரிந்துக் கொள்ளும் வகையில் செயல் முறை விளக்கம் அளிக்கும் வகையில் பல் வேறு துறைகளின் சார்பில் 32 அரங்குகள் அமைக்கப் பட்டு, 45 நாட்கள் நடைபெறும் அரசுப் பொருட் காட்சியினை திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு சாமானிய மக்களின் பாதுகாப்பு அரணாக இருந்து, ஏழை,எளிய மக்களை கைதூக்கி விடுகின்ற அரசாக திகழ்ந்து வருகிறது.குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் விடியல் பயணம் திட்டத்தின் கீழ் நகரப்பேருந்துகளில் சாமானிய தாய்மார்கள்,மகளிர்கள் கட்டணமில்லாமல் நாளொன்று எத்தனை முறை வேண்டுமானாலும் பயணம் மேற்கொள்ளலாம் என்ற திட்டத்தினை தந்து,அதற்கான செலவு தொகையினை போக்குவரத்துத்துறைக்கு வழங்கியதன் அடிப்படையில், மகளிர்கள் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ள வழிவகை செய்துள்ளார்.முதலமைச்சரின் அவர்களின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் ஏழை,எளிய மக்களின் குழந்தைகள் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 மும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/ வழங்கி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம்,வள்ளியூர்,நாங்குநேரி, களக்காடு,பாளையங்கோட்டை மற்றும் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ. 605.75 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டப்பணிகள்,7 பேரூராட்சி கள் மற்றும் களக்காடு நகராட்சியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் தாமிரபரணி குடிநீர் வழங்கு வதற்காக ரூ.423 கோடி ஒதுக்கீடு செய்து, விரைவில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் கிடைக்க பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

மேலும் தமிழகத்தின் தொன்மையான வரலாற்றினை உலகரிய செய்யும் பொருட்டு கொற்கை,ஆதிச்சநல்லூர்,சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல்பொருட்களை காட்சிப்படுத்திட திருநெல்வேலி மாவட்டம் குலவணிகர் புரம் கிராமத்தில் அருங்காட்சியகம் அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பொதுப்பணித்துறை சார்பில் ரூ.56.57 கோடி திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு,நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,ஏறத்தாழ 13 ஏக்கர் நிலத்தில் 54 ஆயிரம் சதுர அடியில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

நமது தாய்மொழியான தமிழ்மொழி இலங்கை,கன்னடா,சிங்கப்பூரியில் ஆட்சி மொழியாகவும்,மலேசியாவில் இரண்டாவது மொழியாக என இந்தியாவில் தோன்றிய பல மொழிகளில் நமது தமிழ்மொழி தான் வெளிநாடுகளில் ஆட்சிமொழியாக இருக்கிறது. எனவே தான் நமது முதலமைச்சர் அவர்கள் தமிழை காப்போம், தமிழனை காப்போம்,சமூக நீதியோடு எல்லோரும் சமம் என்ற உன்னத எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களின் வசதிக்கேற்ப அவர்களின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும்,கோரிக்கை மனுக்களையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான பொதுமக்களிடையே விண்ணப்பங்கள் பெறப்பட்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் மூலம் சேவைகள் கிடைப்பதற்கு, திருநெல்வேலி மாவட்டத்தில் 255 முகாம்கள் நடத்திடுவதற்கு திட்டமிடப்பட்டு அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இம்முகாம்களில் உடனடியாக தீர்வு காணும் வகையில் குடும்ப அட்டைகளில் பெயர் மாற்றம் செய்தல், பெயர் சேர்த்தல், மின்விநியோகம் பெயர் மாற்றம் போன்ற உடனடியாக தீர்வு காணும் மனுக்களுக்கு முகாம் நடைபெறும் இடத்திலேயே தீர்வு வழங்கப்பட்டு பலர் சேவைகள் பெற்று வருகின்றனர்.மேலும் முகாமில் தீர்வு கிடைக்காத மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காணவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற நாளிலிருந்து அனைத்து துறைகளையும் மேம்படுத்தி பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளதை ஏழை,எளிய பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அரசுப் பொருட்காட்சி வாயிலாக காட்சிப்படுத்தப்பட்டுள் ளது.மேலும் இப்பொருட்காட்சியில் அரசின் திட்டங்களை எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் விளக்கப்படவுள்ளது. இப்பொருட் காட்சியினை கண்டு களித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (நினைவங்கள்) கு.தமிழ்செல்வராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) தவலேந்து,ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தசரவணன்,திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) இலக்குவன்,தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) ஜெயா, மண்டலத் தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா, களக்காடு நகர்மன்ற துணை தலைவர் பி.சி.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் சுந்தர்,ஷமி அமீபாத் , ரம்ஜாம் அலி,ஜூலியட் சகாயமேரி, ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக் உட்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகி கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

11 ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை! வளர்ச்சிப் பணிகளுக்காக

தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்த வேண்டும்!

மக்களவையில் - சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 2- மக்களவை மழைக்கால கூட்டத்தொடர் நடந்து வருகிறது. இதில் எம்.பி.க்களின் நிதியை உயர்த்த வேண்டும் என திருவண்ணாமலை எம்.பி. சி.என்.அண்ணாதுரை கோரிக்கை வைத்தார்.

அதன் விவரம்:

ஒவ்வொரு தொகுதி மேம்பாட்டு லோக்சபா உறுப்பினர்களுக்கும் நிதியாக ஆண்டுக்கு ரூ.5 கோடி ஒதுக்கப்படுகிறது. இந்த ரூ.5 கோடி நிதியில் ரூ.4 கோடியில் மட்டுமே வளர்ச்சி பணிகளை தேர்வு செய்ய முடிகிறது. மீதம் இருக்கும் ரூ.ஒரு கோடியில் ரூ.10 லட்சம் நிர்வாக செலவுக்காகவும், மீதி ரூ.90 லட்சம் ஜி.எஸ்.டி.யாகவும் மத்திய அரசே திரும்ப பெற்றுக் கொள்கிறது.

ஆறு சட்ட சபை தொகுதிகளில் கிட்டத்தட்ட 20 லட்சத்துக்கும் அதிகமாக மக்கள் வசிக்கக்கூடிய ஒரு லோக்சபா தொகுதியில் ரூ.4 கோடியில் எந்த அளவுக்கு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்பது தெரியவில்லை. தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை லோக்சபா உறுப்பினர்களின் நிதி உயர்த்தப்படும். ஆனால் 11 ஆண்டுகளாக லோக் சபா உறுப்பினர்களின் நிதி உயர்த்தப்படவில்லை. எனவே நிதியை உயர்த்தி ஜி.எஸ்.டி. தொகையை சேர்த்து வழங்க வேண்டும். என சி.என்.அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை வைத்தார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்
அரிமளம் வடக்கு ஒன்றியம்,
அரிமளம் பேரூர் மாவட்ட பிரதிநிதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்
தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெ.மணி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து,

2025 ஆகஸ்ட் 4 (திங்கட் கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

தகுதி விவரம்

பேரூர்க் கழக நிர்வாகப் பொறுப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்டப் பிரதிநிதிகளுக்கும் போட்டியிடுவோருக்கு வேட்பு மனுவில் முன்மொழிவோரும் - வழிமொழிவோரும், தொடர்புடைய பேரூர்க் கழகத்தில் அடங்கியுள்ள வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகியாகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு படிவங்களை மாவட்டக் கழகச் செயலாளரிடம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 600 018.
நாள் : 01.08.2025.

துரைமுருகன்,
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொ. தனசேகரன்
ஆகஸ்ட் 2 (2015)

தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, வேளச்சேரி பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.

1962ஆம் ஆண்டில் வேளச்சேரி கிளைக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்த இவர், தாமஸ்மலை ஒன்றிய பிரதிநிதி, வேளச்சேரி வட்டச் செயலாளர், வேளச்சேரி பகுதிச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றினார்.

1996–ல் சென்னை மாநகராட்சி 153–வது வார்டில் கழகத்தின் சார்பில் மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களை நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்
ஓசூர் மாநகரம்
மேற்கு பகுதி - 6வது வட்டம் மற்றும் வடக்கு பகுதி 13வது வட்ட
பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்
தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் மாநகரம், மேற்கு பகுதியில் உள்ள 6வது வட்டம் மற்றும் வடக்கு பகுதியில் உள்ள 13வது வட்டம் ஆகிய வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வட்டக் கழகப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

6வது வட்டம்

வட்டப் பொறுப்பாளர் :எம். சந்தோஷ்குமார்,
785/4, கே.சி.சி. நகர்,
ஓசூர்.
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:1.முருகதாஸ், ஓசூர்
2. நஞ்சப்பா, ஓசூர்
3. கணேஷ், ஓசூர்
4. புனிதா, ஓசூர்
5. கவுதம், ஓசூர்
6. சரவணன், ஓசூர்
7. முருகேஷ், ஓசூர்
8. மஞ்சுநாத், ஓசூர்
9. செந்தில்குமார், ஓசூர்
10. செல்வம், ஓசூர்

13வது வட்டம்

வட்டப் பொறுப்பாளர்: எம்.மோகன்,
11/18, முதல் தெரு,
கிருஷ்ணா நகர்,
ஓசூர். கிருஷ்ணகிரி மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்: 1.கண்ணன் ஓசூர்
2. ரகு, ஓசூர்
3. முருகேசன், ஓசூர்
4. மரகதம், ஓசூர்
5. பாண்டியன், ஓசூர்
6. குணசேகரன், ஓசூர்
7. உதயகுமார், ஓசூர்
8. முருகேஷ், ஓசூர்
9. சுரேஷ், ஓசூர்
10. சேகர், ஓசூர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 01.08.2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.